உ

சிவமயம்




யாழ்ப்பாணம், மாதகல்

## அமரர் திரு. செல்லையா சங்கரப்பிள்ளை அவர்களின்

# நினைவு மலர்

22. 04. 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய் அன்பு நிறைந்த
பேரொளியாய் இன்சொல் பேசி அன்புடன்
எம்மைப் பேணிக்காத்து
பண்புடனும், பாசத்துடனும், நேசத்துடனும்
இன்முகத்தினனாய் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இச்சிறுமலரினைக்
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

**இங்ஙனம்**
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்பு டைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஒருரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணிநீ இம் முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

## திருவாசகம்

அம்மையே அப்பாஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறு சமயங்கள் மாளப்
பேதகம் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றியான் செய்
பாதகம் அனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## திருப்புகழ்

உம்பர் தருதேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் னேமுதத் - துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக்காக வனத் - தணைவோனே
தந்தை வலத்தாலருள்கைக் - கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானைமுகம் - பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மலக
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரியவாழ்வு வாழ்ந்த செம்மல்

# செல்லையா சங்கரப்பிள்ளை அவர்கள்

மானிலம் போற்றும் மாதகல் தன்னில்
மதிப்புறு குலத்தில் தோன்றிய செம்மல்
செல்லை யாவெனும் சீரு குணத்தோன்!
தங்கரத் தினத்தைத் திருமணம் செய்து
இல்லற மென்னும் நல்லறந் தன்னில்
இனிதுமே வாழ்ந்து இனியநற் புதல்வராம்
சங்கரப் பிள்ளை கந்தசாமி யொடு
தம்பையா நடராசா எனும்நற் புதல்வரைப்
பாரோர் போற்றப் பெற்று மகிழ்ந்தனர்
பிள்ளைகள் யாவரும் பொன்போலத் திகழ
பேணியே வளர்த்துப் பெருமகிழ் வெய்தினர்
கல்வியே புகட்டிக் களிப்பும் எய்தினர்
சங்கரப் பிள்ளையெனும் சால்புறு மகனை
விரும்பியே விக்னேஸ் வரவித்தியா சாலைக்
கல்வியைத் தொடர காலடி பதித்தனர்
சங்கரப் பிள்ளையும் சங்கையாய்க் கற்றுக்
கல்வி கேள்வியில் வல்லவ ரானார்
கற்றுத் தேறிக் கட்டிளம் காளைபோல்
திகழ்ந்து வரும் காலையில் சிறப்புறு
தொழிலாய்க் கமமும் செய்து யாவரும்
என்றும் போற்றும் எழில்தரு செல்வம்
நன்றாய்ப் பெற்று நயந்து இருக்கையில்
மாதகல் ஊரிலே மாண்புடன் விளங்கிய
வினாசித் தம்பியும் தங்கநல் முத்துவும்
தவத்தால் பெற்றநல் இலட்சுமி தன்னை
கைத்தலம் பற்றியே கல்யாணம் செய்தார்
கல்யாண வாழ்வு கற்கண்டா யமைய
நாகேந்திர ராசா நாகேஸ் வரியும்
நாகம் மாவொடு சரஸ்வதி தானும்
பாலச் சந்திரன் கணேச லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஆகிய | புதல்வரை | அவனியில் | பெற்று |
| அளவிலா | மகிழ்வில் | ஆழ்ந்து | மூழ்கினர் |
| சிறப்புடன் | வாழ்ந்த | சிரேஷ்ட | புதல்வன் |
| நாகேந்திர | ராசா | பரமேஸ் | வரியைக் |
| கல்யாணஞ் | செய்துமே | களிப்புறு | நாளில் |
| நந்த | குமாரி | நிர்மலா | தேவி |
| பிரபா | கரனொடு | சந்திர | வதனியாம் |
| தவத்திரு | புதல்வரைத் | தரணியில் | கண்டு |
| உள்ளம் | உவப்ப | உயிராம் | பேத்தி |
| நந்த | குமாரி | நல்வாழ்வு | அமைய |
| சுதா | சங்கரைத் | திருமணம் | செய்தபின் |
| அந்தகன் | கொடுமையால் | சுதா | சங்கரும் |
| விண்ணுல | கெய்தச் | சங்கரப் | பிள்ளை |
| தம்பதி | யிருவரும் | கவலையில் | மூழ்கினர் |
| இரண்டாம் | பேத்தி | நிர்மலா | தேவி |
| விஜய | குமாரை | விருப்புடன் | மணக்க |
| இன்புற்று | மகிழ்ந்தலர் | இன்னலை | மறந்தனர் |
| இவர்கள் | இப்போ | இத்தாலி | நாட்டவர் |
| பிரபா | கரனொடு | சந்திர | வதனி |
| சேர்ந்துமே | வாழும் | பேறு | பெற்றனர் |
| இரண்டாம் | பிள்ளையாம் | நாகேஸ் | வரியும் |
| வேலுப் | பிள்ளையை | வதுவை | செய்து |
| ரவிச்சந் | திரனொடு | சந்திர | குமாரும் |
| சுதா | கரனுடன் | விஜய | குமாரும் |
| சிவகு | மாரொரடு | துர்கா | தர்சினி |
| ஆகிய | பிள்ளைகள் | அவனியில் | கண்டனர் |
| கவிதாவை | மணந்த | ரவிச் | சந்திரன் |
| பிரணவன் | மோகன் | ராஜைப் | பெற்றனர் |
| இவர்கள் | யாவரும் | ஜேர்மனில் | உள்ளனர் |
| சயந்தினி | தன்னைத் | திருமணம் | செய்த |
| சந்திர | குமாரும் | இத்தாலி | வாழ்வினர் |
| சுதா | கரன் | நிசாந் | தினி |
| தம்பதி | மூலம் | நிவே | ஜனைக் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு உவகை கொண்ட வேளையில்
இத்தாலி நாட்டில் விஜய குமார்
நிர்மலா தேவி தம்பதி மூலமும்
சிவ குமார் துர்க்கா தர்சினி
இத்தாலி வாழ்வில் இறும்பூ தெய்தினர்
மூன்றாம் பிள்ளையாம் நாகம் மாவும்
குணபா லனெனும் குணாளனை மணக்க
பத்ம ராஜ் பத்ம லோசனி
பத்ம சிறியொடு பத்ம ராஜி
பத்ம ரூபன் பிள்ளைகள் கண்டனர்
பத்ம லோஜினி சிவசுதன் வாழ்வு
கச்சித மாகவே கனடா விலமைய
பத்ம சிறி சிரிதா இல்லறம்
இங்குமே யமைய இன்பம் பெற்றனர்
நாலாம் பிள்ளையாம் சரஸ்வதி தனக்கு
தவபா லன்என்னும் தகைசால் கணவன்
இல்லத் தமைய இனிய புதல்வராய்
தினேஸ் குமார் சதீஸ் குமார்
சுரேஸ் குமார் ரஜீஸ் குமார்
நிரோஸ் குமார் நிறைவுடன் திகழ
தினேஸ் குமார் நிதர்சினி திருமணம்
பார்த்துமே பரவசம் பெற்று மகிழ்ந்தனர்
ஐந்தாம் பிள்ளை பாலச் சந்திரன்
பரமேஸ் வரியைப் பாணிக் கிரகம்
செய்துமே நல்லதாம் கபில் றாஜ்
அர்ஜினி தர்ஜினி பார்த் திபன்
ஆகிய பேரரைக் கண்டுமே நிதம்
அன்பு மேலோங்கி ஆனந்தம் உற்றனர்
ஆறாவ தான அருந்தவப் புதல்வன்
கணேச லிங்கம் அருட் செல்வியை
மணந்தே இத்தாலி வாழ்ந்து இனிதே
இல்லறம் சிறப்புற நடாத்தியே யங்கு
இன்புறு வாழ்வு வாய்க்கப் பெற்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகு முறையில் இனியநற் புதல்வர்
பேரர் யாவரும் பெருமை கொடுக்கச்
சங்கரப் பிள்ளை இலட்சுமி தம்பதி
இவ்வுல கதனில் இன்புற் றிருக்க
இருபத்து மூன்று மூன்று இரண்டா
யிரத் தைந்து அன்று ஏங்கியே
யாவரும் நொந்து அலறியே பதற
அந்தகன் என்போன் அபகரித் தெடுத்துச்
சங்கரப் பிள்ளையின் இன்னுயிர் தன்னை
இறையடி சேர்த்தான் இரங்கியே உறவினர்
உருகி அழுதனர் ஊரார் யாவரும்
பதறியே அழுதனர்! பன்னியே அழுதனர்!
யார் அழுதும் பயனே இல்லை!
விதியை எவரும் வெல்ல முடியுமா?
ஆகவே எங்கள் சங்கரப் பிள்ளை
இவ்வுலகு விட்டு இறையடி சேர்ந்தார்
அமரர் சங்கரப் பிள்ளை என்றுமே
இறையருள் பெற்றவர் இனியன சொல்பவர்
சனசமூக நிலையத் தாபராய் இருந்தவர்
ஞான வைரவர் பரிபாலக ரானவர்
நுணசை முருகனில் தண்ணீர் ஊற்றித்
தாகம் தீர்த்தவர் தருமம் செய்தவர்
பொதப் பணிதன்னில் பேர்தனை எடுத்தவர்
விவசாய சம்மேளனம் கிராம முன்னேற்றச்
சங்கங்கள் தன்னில் அங்கம் வகித்தனர்
இத்தகு திறலோன் இன்றிலை யென
இதயம் நெகிழுதே! நெஞ்சம் துடிக்குதே!
இருப்பினும் நாங்கள் இத்திலந் தன்னில்
ஆறுதல் கொள்வோம்! அமைதி பெறுவோம்!
சங்கரப் பிள்ளையின் சிவபதப் பேறு
என்றுமே திலைக்கப் பிரார்த்தனை செய்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் திவலைகள்

## மனைவி

மாங்கல்யம் பூட்டி மனமகிழ்ந்த என் கணவா!
மாய்ந்திங்கு யான்வாட மரணித்துப் போனீரே!
ஈங்குமைக் காணாது ஏங்கித் தவிக்கின்றேன்
இன்னுயிரே என்னன்பே எப்போதுமைக் காண்பேன்!
பாங்கான என் கணவா! பர்தாவே என்னை விட்டுப்
பரலோகம் போனதென்ன பதைக்கின்றேன் துடிக்கின்றேன்
தூங்கும் கட்டிலுமோ துயரம் கொள்ளுதையா
தாங்கவே முடியாமல் தவிக்கின்றேன்! தவிக்கின்றேன்.

## பிள்ளைகள்

அன்பு காட்டியெமை ஆதரித்து வளர்த்த அப்பா
அவனியில் நீரில்லாமல் ஆற்றாது துடிக்கின்றோம்
தென்பு தருமப்பா தேன்போல் இனிக்குமப்பா
துன்பத் துயராலே துவண்டுதாம் வாடுகிறோம்
என்பும் உருகுதையா எமதுருவும் அழிகுதையா
எமன்தான் அழைத்தவுடன் எமைவிட்டு ஏன் பிரிந்தீர்!
இன்பமுகம் காட்டியே இனியகதை சொல்வீரே
இனியுங்கள் திருவுருவை இவ்வுலகில் காண்போமா

## வெளிநாட்டில் வதியும் பிள்ளைகள்

அப்பா! ஆவி பிரிகையிலே அயல்நாட்டில் இருந்தோமே
அன்பின் திருவுருவே! அவனியில்தாம் காண்போமா
இப்பாரில் உம்மைப்போல் இனியதந்தை வாய்ப்பாரோ!
இங்கிருந்தே உருகியழ எமைவிட்டுப் போனீரோ!
தப்பேதும் யாம்செய்தால் தக்கபுத்தி சொல்பவரே
தரணியில் யாம் உருகியழ சீக்கிரம்நீர் சென்றது ஏன்?
முப்போதும் எமைத்தூக்கி முத்தமிட்ட அப்பாவே!
மூவாயிரம் மைல்தாண்டி முனுகிதொந்து அழுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

அன்போ டெமையழைத்து ஆறுதல் கூறிடுவீர்
ஆகும் செயலுக்கு அரியவழி காட்டிடுவீர்
தேன்போ லினிக்கும் எங்கள் தேனான மாமாவே!
தேடியுமைக் காண்பதற்குத் தவியாய்த் தவிக்கின்றோம்
இன்பான பிள்ளைகளை இல்லறத்தே யெமக்காக்கி
ஈந்தஎம் மாமாவை இனியெப்போ கண்டிடுவோம்
வன்புமொழி பேசமாட்டீர் வாருங்களென அழைப்பீர்
வான்மழை போலெமக்கு வாழவழி செய்திடுவீர்

அன்புள்ள மாமா! ஆசையுள்ள மாமா!
ஆசையாம் பேரரை அணைக்கின்ற மாமா
தென்புதரும் மாமா தேசம்புகழ் மாமா
தேடியே தவிக்கின்றோம் நாடியோடி வருவீர்.

## பேரர்

சின்னஞ் சிறுவயதில் சிங்காரப் பாட்டிசைத்து
தித்திப்பாய்ச் சொல்கின்ற தாத்தாவே எங்குற்றீர்!
அன்னம் போல்நடக்கும் அழகாம் பேரர்களை
அள்ளித் தூக்கிவைத்து அன்புமுத்தம் கொடுப்பீரே!
இன்னம் தங்கள் – எண்ணம் இதயமதில் இருக்குதையா
இனியும்மைக் காணும்நாள் இவ்வுலகில் வருமோதான்
அன்பின் தாத்தாவே ஆசையுள்ள தாத்தாவே
அருமைப் பேரரை அழவைத்து எங்கு சென்றீர்

## தேற்றம்

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கந்தர்சஷ்டி கவசம்



## காப்பு

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்து
குமரனடி நெஞ்சே குறி

நேரிசை வெண்பா

**துதிப்போர்க்கு வல்லினைபோம் துன்பம்போம்நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்**
**நிஷ்டையுங் கைகூடும் நிமலர ருள்கந்தர்**
**சஷ்டி கவசந் தனை.**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்றி
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடையுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி வையும்
நிலைபெற் றொன்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திரிவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலகனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிறை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காகக்
பின்கை யிரண்டும பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் னோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூ தம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புளைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணையும்
கனகபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்ல இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்டமுடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனை
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூ ரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விசங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைக்ஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குறவாக வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்காக
உன்னைத் துதிக்க உனதிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் நாடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன
வாழ்க வாழ்வென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் சஷ்டி கவசம் மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவார்
மாற்றால ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடு
நவமேத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் தணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நன்றி நவிலல்

எமது குடும்ப குலதிலகரும் தலைவருமாகிய **திரு.செல்லையா சங்கரப்பிள்ளை** அவர்களின் இறுதிக்கிரியையில் நேரில் வருகைதந்து அனுதாபம் தெரிவித்தோர்க்கும் தொலைபேசி, தொலை நகர்வு, கடிதங்கள், தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் இன்றைய அந்தியேட்டி வைபவத்திற்கு வருகை தந்து சிறப்பித்த குருமாருக்கும் அன்பர்களுக்கும் இம்மலரை எழுதியுதவிய பிரசங்கபூஷணம் சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி B.A.Dip.in.Ed அவர்கட்கும் இம்மலரை மிகக் குறுகிய காலத்தில் யாவர்களது கைகளிலும் மலர சிறந்த முறையில் அச்சிட்டுதவிய சங்கானை திருமொழி அச்சகத்தாருக்கும் எம் உளங்கனிந்த நன்றியினை நவில்கின்றோம்.



மனைவி,

மக்கள், மருமக்கள்,

பேரர்.

மாதகல்

22.04.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா விருட்சம்

செல்லையா + தங்கரத்தினம் — வினாசித்தம்பி + தங்கமுத்து

**சங்கரப்பிள்ளை** + **இலட்சுமி**

நாகேந்திராசா
+
பரமேஸ்வரி
1. நந்தகுமாரி
   +
   சுதாசங்கர் (அமரர்)
2. நிர்மலாதேவி
   +
   விஜயகுமார் (இத்தாலி)
3. பிரபாகரன்
4. சந்திரவதனி

நாகேஸ்வரி
+
வேலுப்பிள்ளை
1. ரவிச்சந்திரன்
   +
   கவிதா (ஜேர்மனி)
   பிரணவன்
   மோகன்ராஜ்
2. சந்திரகுமார்
   +
   சயந்தினி (இத்தாலி)
3. சுதாகரன்
   +
   நிசாந்தினி
   நிவேதன்
4. விஜயகுமார்
   +
   நிர்மலாதேவி (இத்தாலி)
5. சிவகுமார் (இத்தாலி
6. துர்க்காதர்சினி (இத்தாலி)

நாகம்மா
+
குணபாலன்
1. பத்மராஜ்
2. பத்மலோஜினி
   +
   சிவசுதன் (கனடா)
3. பத்மசிறி + திரிதா
4. பத்மராஜி
5. பத்மரூபன்

சரஸ்வதி
+
தவபாலன்
1. தினேஸ்குமார்
   +
   சுதர்ஜினி
2. சதீஸ்குமார்
3. சுரேஸ்குமார்
4. றஜீஸ்குமார்
5. நிரோஸ்குமார்

பாலச்சந்திரன்
+
பரமேஸ்வரி
1. கபில்ராஜ்
2. அர்ஜினி
3. தர்ஜினி
4. பார்த்தீபன்

கணேசலிங்கம் (இத்தாலி)
+
அருட்செல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org